# 16 இறைவார்த்தை வாழ்வின் அடிப்படை

**திருப்பாடல் : 119: 105-111**

இறைவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தும் பிரதானமான வழியாக **''இறைவார்த்தை''** யைக் குறிப்பிடலாம் என்பதைக் காண்பிக்கின்றது. இறை வார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக்கொண்டு எமது வாழ்வை வெற்றியடையச் செய்யும் முறையைத் திருவிவிலியம் எமக்கு வெளிப்படுத்துகின்றது. எனவே எமது கிறிஸ்தவ வாழ்வை நல்லவழியில் நடத்துவதற்கு கடவுளின் வார்த்தையை சரியான முறையில் விளங்கிக்கொள்வது மிகவும் அவசியமாகும்.


இறைவார்த்தையை விளங்கிக் கொள்வதற்காக கடவுள் எமக்குப் பலவகையிலும் வழிகாட்டுகின்றார். முக்கியமாகக் குருவானவர், ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர், பெற்றோர், பெரியோர், சகோதர, சகோதரிகள் போன்றோர் இறைவார்த்தையை நாம் விளங்கிக் கொள்வதற்கு வழிகாட்டிடுவார்கள்.



**''என் காலடிக்கு உம்வாக்கே விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே''**
**திருப்பாடல் : 119: 105**

**வாசிப்போம்**
**திருப்பாடல் : 119: 105-111**

இறைவார்த்தை எமது வாழ்விற்குச் சரியான வழியை வெளிப்படுத்தக்கூடிய ஒளியாகும். பாவம் என்னும் இருளில் இருந்து எமது வாழ்வை ஒளிமயமாக்குவதற்கு இறைவார்த்தை எமக்கு வழிகாட்டுகின்றது. இது எவ்வாறு நிகழ்கின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.




♦ **வாழ்விற்கு சரியான வழிகாட்டும் இறைவார்த்தை**

இறை வார்த்தையானது எமது வாழ்வை ஒளியாக்குகின்றது. இறைவார்த்தை எப்போதும் நாம் பயணிக்க வேண்டிய சரியான பாதையைக் காண்பிக்கின்றது. இருளான, தவறான வழியில் இருந்து எம்மைச் சரியான வழிக்குள் நடத்திச் செல்வது இறைவார்த்தையாகும்.

♦ **தவறை விளங்கிக் கொள்ளச் செய்யும் இறைவார்த்தை**

இறைவனின் இறை கட்டளைகள் எமது வாழ்வில் ஏற்படும் தீமையான செயல்களை எமக்குக் காண்பிக்கின்றது. இறைவன் மனிதன் மூலமாக இறை கட்டளைகள் நிறைவேற்றப்படுவதை எதிர்பார்க்கிறார். எனவே இறைவனுக்காக எம்மால் செய்யக்கூடிய முழுமையான பணியானது அவரின் கட்டளைகளை நிறைவேற்றுவதே ஆகும். எனவே இடைவிடாமல் இறை தந்தையின் கட்டளைகளை கற்றுக்கொள்ளு வதற்கு முயற்சி செய்வது அவசியமாகும்.

அது மட்டுமன்றி அக்கட்டளைகளை அனுதினமும் தியானித்து எப்போதும்

அக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். இதன் மூலமாக நிறைவான வாழ்வை நோக்கிச் செல்வதற்கு எமக்கு ஆற்றல் கிடைக்கின்றது. நாம் செயற்படும் அனைத்துச் செயல்களிலும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு நாம் செய்வது தவறா? சரியா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

### ♦ எம்மைத் தைரியப்படுத்தும் இறைவார்த்தை

இறைவார்த்தையானது நாம் முகம் கொடுக்கவேண்டிய பலவிதமான துன்பங்கள் தொல்லைகளின்போது எம்மைத் தைரியப்படுத்துகின்றது. இறைவார்த்தை எமது ஆன்மீகத்தைத் தைரியப்படுத்தி எமது வாழ்வை உயிர்ப்பிக்கின்றது. நாம் தைரியமற்ற சந்தர்ப்பங்களில் இறைவார்த்தையை வாசித்துத் தியானிக்கும்போது எம்வாழ்விற்கு புதிய பெலனும் வல்லமையும் கிடைக்கின்றது.

### ♦ இறை கட்டளையைக் கற்பிக்கும் இறைவார்த்தை

இறைவார்த்தையின் மூலம் இறை கட்டளைகளைப் புரிந்து கொள்வதற்கு இறைதந்தை எமக்கு வழி காட்டுகின்றார். எம்வாழ்வை நல்வழியில் கொண்டு செல் வதற்கு அவசியமான இறைகட்டளைகளை நாம் இறை வார்த்தையின் மூலமாக அறிந்து கொள்கிறோம். திருவிவிலியத்தில் இருந்து இறைவன் பெற்றுத் தந்த நீதிச்சட்டங்களை அறிந்து கொண்டு அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமாக எமது வாழ்விற்கு புதிய அர்த்தத்தைக் கொண்டு வருகின்றது.

### ♦ பகைவரைத் தோல்வியுறச் செய்யும் இறைவார்த்தை

இறைவார்த்தையை ஆதாரமாகக்கொண்டு எமக்கு ஏற்படும் அநேகமான பகைவர் களின் துன்பங்களை எம்மை விட்டு அகற்றிவிட முடியும். பாவத்தில் வீழ்வதற்கு எம்மிடையே பலவிதமான சோதனைகள் தோன்றும்போது இறைவார்த்தையினூடாக அவைகளைத் தோல்வியுறச் செய்யக்கூடிய ஆற்றல் எம்மிடம் உண்டு. எனவே எவ்விதமான சந்தேகமோ பயமோ இன்றி இறைவார்த்தை என்னும் பாதையில் பயணிக்க எம்மால் முடியும். எமக்கு நேரிடும் ஆபத்து வேளைகளில் நாம் பயப்படத் தேவையில்லை ஏனெனில் இறைவார்த்தையின் மூலமாக ஆபத்து வேளையிலும் பகைவர்களின் தொல்லைகளிலிருந்தும் எமது வாழ்வு பாதுகாக்கப்படுகிறது.

### ♦ சந்தோசத்தைத் தரும் இறைவார்த்தை

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் நிரந்தரமான உடன்படிக்கையை ஏற்படுத் திக்கொண்ட முறையை திருவிவிலியம் எமக்குக் காண்பிக்கின்றது. எனவே இறை வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதனூடாக வாழ்வது மனிதனின் பொறுப்புமாகும். எனவே முழுமையான விருப்பத்தோடும் பூரண முயற்சியோடும் இறைவார்த்தையின் படி நடப்பது அவசியமாகும். இறைவார்த்தையை தனதாக்கிக் கொண்டு அதற்கேற்ற

படி வாழும்போது மனிதன் மகிழ்வடைகின்றான். எனவே இறைவார்த்தையை விட்டு, தீமையான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது எமது பொறுப்பாகும். இறைவார்த்தை மூலம் வாழ்பவர் நிலையான சந்தோசத்தின் உரிமையாளர் ஆவர். இவ்வாறு இறை வார்த்தையின்படி தன் வாழ்வில் சந்தோசத்தைப் பற்றிக்கொண்ட மாணவனின் உண்மையான அனுபவத்தைக் கீழே காணலாம்.

நகரத்தின் அநேக மைல்களைக் கடந்து தூரத்தில் இருந்த பின்தங்கிய கிராமத்து மாணவன் ஒருவன் க.பொ.த சாதரண பரீட்சையில் பாடங்கள் அனைத்திலும் விசேட சித்தி பெற்றார். கிறிஸ்தவ பக்தியில் வாழ்ந்த இந்த மாணவன் பாடசாலை முடிந்தபின் மாலை நேரத்தைத் தன் பெற்றோரோடு விவசாயவேலைகளில் உதவி செய்வதில் ஈடுபட்டார் எனவே அம்மாணவனுக்கு எந்த ஒரு பாடத்திற்காகவும் மேலதிக வகுப்புகளுக்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இருப் பினும் அவர் திறமையாகச் சித்தி எய்தினார். அம்மாணவன் தான் பெற்றுக் கொண்ட விசேட பெறுபேறுகளைப் பற்றித் தனக்கு கிறிஸ்தவ பாடத்தை கற்பித்த ஆசிரியருக்கு இவ்வாறு கூறினார் ''நான் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து பாடங்களைப் படிப்பதற்கு முன்பாக திருவிவிலியத்திலிருந்து நீதிமொழி களிலோ அல்லது திருப்பாடல்களிலோ ஒரு அதிகாரத்தை வாசித்து அந்நாளை இறைதந்தைக்கு ஒப்புவித்து ஜெபிப்பேன்'' என்றார். அம்மாணவன் இவ்வாறு வெற்றியாகப் பயணிக்க அவனுடைய நல்ல பழக்கத்தினூடாக இறைவன் வழி காட்டினார் என்பதைத் தனது ஆசிரியருக்கு வெளிப்படுத்தினான்.

இறைவார்த்தையை ஏற்று அதன்படி நடக்கும்போது எமது வாழ்வில் சந்தோசம் கிட்டும். அந்த சந்தோசத்தைப் பிறரும் தமது நம்பிக்கையை பெலப்படுத்த பயன்ப டுத்துவது சிறப்பாகும். இறைவார்த்தைக்கு ஏற்ப வாழ்வதன் மூலம் நாம் பெறும் அனுபவத்தை நம் நண்பர்களிடையே பகிர்ந்து கொள்வது அவசியமாகும். அதன் மூலமாக அவர்களின் வாழ்வையும் நல்வழியில் கொண்டு செல்வதற்கு உதவி செய்யமுடியும். பிறரின் வாழ்வை நல்வழியில் இட்டுச்செல்வதற்கும் அவர்களின் தவறுகளைச் சீர் செய்வதற்கும் வாழ்வின் சவால்களை வெற்றி கொள்வதற்கும் எம்மால் உதவிசெய்ய முடியும். ஆபத்துக்களினால் பாதிக்கப்பட்டோரை தைரியப் படுத்துவதற்கும் பிறரின் பயத்தை நீக்குவதற்கும் நல்வழியின் மூலமாக பகைவரை தோல்வியுறச் செய்வதற்கும் இறைவார்த்தை மூலமாக எம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு பாரிய பணியாற்ற முடியும்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையைத் தியானித்து அதன் மூலமாக வழிகாட்டுதலைப் பெற்று தைரியத்தோடும் சந்தோசத்தோடும் வாழ்வதற்கு முயற்சி செய்வோம்.

## செயற்பாடு

1. இறைவார்த்தை மூலம் உமது வாழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் நான்கு எழுதுக.

2. இறைவனுக்கு நாளை ஒப்புவித்து அதிகாலையில் செய்யக்கூடிய விண்ணப்பத்தை எழுதுக.

3. இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உமது நண்பர்களின் வாழ்விற்குப் பெற்றுத் தரக்கூடிய வழிகாட்டல்களை விளக்குக.